# நல்லூர்க் கந்தன்



மெய்கண்டான் அன்பளிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அநுபூதி

## மறு பிரசுரம்

கடந்த இருபத்திநான்கு வருடங்களாக இடையறுது மெய்கண்டான் நல்லூர்த் தேர்த் திருவிழாவில் முருகன் புகழ் பாடும் பிரபந்தங்களை அடியார்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே!

இவ் வருடத்துடன் கால் நூற்றுண்டை எட்டிப் பிடிக்கும் இப்பணியின் வரிசையில் இலகுவான, எளிய நடையுடன் கூடிய ''கந்தர் அநுபூதி'' என்னும் இந்நூல் இவ்வருடம் நல்லூர்த் திருவிழாவில் அடியார்களுக்கு அன்பளிப்பதில் பேருவகை அடைகின்றேம்.

இந்நூல் 1975ம் ஆண்டு வைகாசி விசாகத் தினத்தில் சுழிபுரம் பறுளாய்த் தேர்த் திருவிழாவின் போது மெய்கண்டான் அதிபர் அமரர் நா. இரத்தினசபாபதி அவர்களால் தொகுக்கப்பெற்று மெய்கண்டான் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க அந்நூலை அப்படியே இம்முறை மறு பிரசுரம் செய்கின்றேம்.

ஆண்டுதோறும் தேர்த் திருவிழாவின் போது வெளிவரும் பிரபந்தங்களை கொடியேற்றத்திலிருந்தே வெளியிட வேண்டுமென்ற வேணவா அமரர் நா. இரத்தினசபாபதி அவர்களின் உள்ளத்தில் அன்றுதொட்டே இருந்தது.

அவ் வேணவாவினை நிறைவேற்றும் வகையில் நாம் கொண்ட துரித முயற்சியின் பயனுக இம்முறை தேர்த் திருவிழாவிற்கு சுமார் பத்து நாட்களுக்கு முன்னதாகவே அடியார்கள் கரங்களில் ''கந்தர் அநுபூதி'' தவழும் எனத் திருவருள் முன்நிற்க.....! நம்புகின்றேம்.

—மெய்கண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்



# கந்தர் அநுபூதி

(எளிய நடையிலான உரையுடன் கூடியது)

*

இஃது
மெய்கண்டான் அதிபர்

**நா. இரத்தினசபாபதி**

அவர்களால் தொகுக்கப் பெற்று
மெய்கண்டான் அன்பளிப்பாக
வழங்கப்பெற்றது.

★

மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

கிளை: ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்கண்டான்"
அன்பளிப்பு வெளியீடு

3250
பிரதிகள்

இராக்ஷத வருடம்
வைகாசி விசாகம்
1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

முருகப் பெருமான் என்றும் அகலாத இளமை எளிலுடன் விளங்கும் எமது குல தெய்வம் அவன் இனியன், அருளாளன். 'வேறு கதி யில்லை, நீயே கதி' என்று அவனிடம் தஞ்சம் புகும் அடியார்க்கு அபயம் அளித்து, பன்னிரு விழிப்பார்வையாலும் அருள் புரிவான்.

கலியுக வரதனுய், கண்கண்ட தெய்வமாய் அடியவர்க் கெளியனுய் விளங்கும் முருகனை, தமிழ்க் குமரனை, பாடிப் பரவிய தெய்வப் புலவர்களுள் அருணகிரியார் முக்கியமானவர் ஆவர்.

இவர் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் திருவண்ணுமலையில் அவதரித்தார். இவர் இளமையில் இலக்கிய இலக்கண நூல்கள், திருமுறைச் சாத்திரங்கள், புராணங்கள், வடமொழி நூல்கள் முதலிய பலவும் கற்று, தேர்ச்சிபெற்று விளங்கினுர். இவர் பணம் தேடி, சிற்றின்ப வகையில் செலவிட்டு வந்தார். அதனுல் குட்டம் முதலிய நோய்கள் வரப்பெற்று வருந்தி, அருணை வட கோபுரத்தருகில் ஆறுமுகனிடம் தமது குறையைக் கூறித் தவங்கிடந்தார். பின் வாழ்க்கையில் வெறுப்புற்று உயிர்விட எண்ணி, கோபுரத்திலேறிக் குதித்தார். உடனே முருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் தந்து அருணகிரியாருக்கு அருள் புரிந்தான் தேனூறு தமிழுக்கு வாயூறும் முருகன் ''முத்தைத் தரு'' என்று அடியெடுத்துக் கொடுத்து அருணகிரியாரைப் பாடும்படி பணித்தான்.

அருணகிரியார் பாடிய முருகன் புகழ் நூல்கள் பலவாகும். அவற்றில் திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் ஆதியன முக்கியமானவை.

''உனது பாதமலரில் மந்திரப் பாமாலை ஒன்று சாத்த அருள் புரிய வேண்டும்'' என்று முருகனை வேண்டி அருள்பெற்று இந்த ''கந்தரநுபூதியை'' அருணகிரியார் பாடியருளினர்.

முருகன் அடியார் அனைவர்க்கும் அருளாரமுத நல்விருந்தாக வெளிவரும் இலகுவான உரையுடன் கூடிய இந்நூலினை நீவிர், பொருளுணர்ந்து தினமும் பாராயணம் செய்து அந்த முருகவேளை எந்த வேளையிலும் மறவாது போற்றி இருமை நலன்களையும் பெற்றுய்ய, இந்நூல் உதவுமானல், நாம் கருதிய பயனைப் பெற்றவராவோம்!

வணக்கம்.

நா. இரத்தினசபாபதி
''மெய்கண்டான்''

கொழும்பு,
23-5-75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக தியானம்

அருள் மழை பொழியும் ஆறு திருமுகங்களும், மலர்ந்த பன்னிரு விழித் தாமரைகளும், மணமுடைய குவளை மலர் மாலை பொலிவுற்ற மலையொத்த திருத் தோள்களும், பெரும் வரங்களை அடியார்க்கு அருளவேண்டி நீண்டுள்ள அழகிய பன்னிரு திருக் கரங்களும், மயக்கத்தால் வரும் இருவினையையும் மிதித்தலால் சிவந்த மலர் போன்ற திருவடிகளும் உடைய கங்கையின் ஒப்பற்ற திருமகனே! குகனே! கனியே! கண்ணின் மணியே! கருணையே குடிகொண்டவனே! ஜோதியாய் சுடர் விடும் ஒளியே! மயில் வாகனனே! கடப்ப மாலை அணிந்தவனே! துதிச் சொற்களுக்கு இனிமை பயப்பவனே! தமிழின் அழகே! பழனிப் பதியின் தலைவனே! பக்தியினால் கண்களிலிருந்து நீர்பெருக உன்னைத் தொழுகின்ற அடியார்களுக்கு அமுதே! முன்னைத் தீவினைகளும் ஏனைத் தீவினைகளும் பொடிபடும் படியாக நடம்பயில்கின்ற மயிலை வாகனமாகக் கொண்ட கடவுளே! வாசனை வீசுகின்ற தாமரையுள்ள சரவணப் பொய்கையும், கந்தபுரியும், கந்தவெற்பும், செங்கழுநீர் உதிக்கின்ற திருத்தணியும், காஞ்சிபுரத்துக் குமரகோட்டமும், திருவேரகமும், சோலைமலையும், திருப்

பரங்குன்றும், திரு ஆவினன் குடியும், திருவேங் கடமலையும், குற்றால மலையும், இலஞ்சியும், கதிர்காமமும் ஏனைய குன்றுகள் தோறும் விளையாடி திருச் செந்தில் நகரில் அரசு புரியும் பெருமானே! முருகா! கருணைக் கடலே! அந்த மில் அரசே! அன்பர் மனத்துறையும் ஆண்டவா! அன்பின் வடிவே! அருட் பெருஞ் சோதி! ஆருயிர்த் துணையே! ஆராவமுதே! பேரானந்தப் பெருங் கடலே! பிறப்பறுக்கும் பெருமானே! வானவர் போற்றும் வள்ளலே! தேனமுதாகிய தித்திக்குந் தீந்தமிழே! தேவாதி தேவா! திருவருணைக் கோபுரத்தினின்றும் வீழ்ந்த அருணகிரியாரை ஆட்கொண்ட ஐயனே! செந்தமிழ்த் திலகமே! சிவனார் தம் திருவே!

வேதம் நான்கினும் மெய்ப்பொருளானவா! வினை தீர்க்கும் வேலவா! குன்று தோறாடும் குமரா! கந்தா! கடம்பா! கதிர் வடிவேலா! கருணாகரா! கார்த்திகேயா! கண்ணின் மணியே! கலியுக வரதா! விண்ணவரைச் சிறை மீட்ட அண்ணலே! எண்ணுதற் கரிய வண்ணக் கொழுந்தே!

இன்பத்தின் எல்லையே! ஏழிசைப் பயனே! அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! சிவ குருபரா! சிலம்பா! தேசிகா! பாலசுப்பிர மணியா! கோல மயில் வீரா! சூர்ப்பகைவா! சரவணபவா! குன்றெறிந்தோனே! குகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகா! முன்னான்கு தோளா! முக்கண்ணி மைந்தா!

அரிமருகா! திருமுருகா! வேல் முருகா! வள்ளி மணவாளா! பாபசங்காரா! மன்னுயிர் அனைத்தும் போற்றும் மாதவா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பவா! மும்மல மறுக்கும் மூர்த்தியே!

எண்ணரிய பிறவிகளில் அரிதாகிய மானிடப் பிறவியை எனக்களித்தாய்; அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பாங்குறப் பிறக்க அருள் செய்தாய். பிறந்தேன். வளர்ந்தேன். கல்வி பயின்றேன். கற்றதனால் ஆய பயன் நின் திருவடிகளைப் பற்றுவதன்றி வேறொன்றுளதோ? வீணே உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் எதையாவது உளறித் திரிவதற்குமா இப் பிறவியை எனக்களித்தாய்?

ஈசா! நின் பொன்னார் திருமேனியைக் கண்ணாரக் கண்டு களிக்கவும், என் கரங்களால் நாளும் நன் மலரெடுத்து நின் மின்னார் பொன் மேனியில் சாத்தி வணங்கவும், அல்லும் பகலும் அகமுருகி நின் பெருமை மிகு திருநாமங்களை என் வாயால் இசைக்கவும், நின் கோயில் வலம் வந்து "முருகா முருகா" என்று உருகா நற் சிந்தையுடன் ஆனந்தக் கூத்தாடி வணங்கி நற்கதி பெற்று உய்ய 'பச்சை மயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்,
அச்சம் அகற்றும் அயில் வேலும்—கச்சைத்
திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும்-விரிகரணம்
சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத்திசையும் எதிர்தோன்ற எழுந்தருளி,'
நேரும் இடர்களையெல்லாம் தூளாக்கி, எவ்வ
ரம் கேட்பினும் அவ்வரத்தை தந்து, மகிழ்ச்சி
யோடு என் உள்ளத்தில் புகுந்திருந்து எனது
பற்றுக்களை நீக்கி, மும்மலத் தொடர்புகளையும்
அகற்றி, அடியேனை நின் திருவடித் தொண்ட
னாக ஆட்கொண்டு அடியேனுக்கு முன்னின்று
திருஅருள் புரிவாயாக!

—''மெய்ப் பதி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருக
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல் சேர்
செஞ்சொல் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| **தஞ்சத்து** | தஞ்சம் என்று வந்தவர்க்கு |
| **அருள் சண்முகனுக்கு** | அருள்புரியும் முருகப்பெருமானுக்கு |
| **நெஞ்சக் கனகல்லும்** | கடினமான கல்லுப்போலுள்ள இளகாத நெஞ்சமும் |
| **நெகிழ்ந்து உருக** | கரைந்து உருகும்படி |
| **இயல்சேர்** | இயற்றமிழுக்குச் சேர்ந்த |
| **செஞ்சொல் புனைமாலை** | நலமுடைய சொற்களால் தொடுக்கப் பட்ட இப் பாமாலையானது |
| **சிறந்திடவே** | சிறப்பாக விளங்கும் பொருட்டு |
| **பஞ்சக்கர ஆனைபதம்** | ஐந்து திருக்கரங்களையுடைய யானைமுகக் கடவுளின் திருவடிகளை |
| **பணிவாம்** | வணங்குவாம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே 1

ஆடும் பரி வேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாக அருள்வாய்
தேடும் கயமா முகனை செருவில்
சாடும் தனியானை சகோதரனே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| தேடும் கயமாமுகனை | (துன்புறுத்துவதற்காக தேவர்களைத்) தேடிச் செல்கின்ற கயமுகாசுரனை |
| செருவில்சாடும் | போர்க்களத்தில் தாக்கிவென்ற |
| தனியானை சகோதரனே | ஒப்பற்ற ஆனை முகக் கடவுளின் தம்பியாகிய ஆறுமுகக் கடவுளே |
| ஆடும்பரி (என-உம்) | (கார்கால மேகத்தைக் கண்டு, களித்து) ஆடுகின்ற மயில் எனவும் |
| வேல் (என-உம்) | வேல் எனவும் |
| அணி சேவல் என(-உம்) | அழகிய சேவல் எனவும் |
| பாடும்பணியே | உனதுபுகழை மனம்உருகிப் பாடுகின்ற செயல் ஒன்றினையே |
| பணியா(க) அருள்வாய் | தொண்டாக அருள் செய்வீராக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலேயோ
வெல்லா மறவென் னேயிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

உல்லாச நிராகுல யோக வித
சல்லாப விநோதனும் நீ அலேயோ
எல்லாம் அற என்னே இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| முருகா | முருகப் பெருமானே |
| சுரபூபதியே | விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலேவரே! |
| உல்லாச(னும்) | இன்பமுடையவரும், |
| நிர்ஆகுல(னும்) | துன்பம் இல்லாதவரும், |
| யோக (னும்) | சிவயோக மூர்த்தியும், |
| இத (னும்) | இனிமையாகப் பேசுகின்றவரும், |
| சல்லாப (னும்) | மகிழ்ச்சியைத் தருகின்றவரும், |
| விநோதனும் | அருள் விளேயாடல்களேப் புரிபவரும், |
| நீ அலேயோ | தேவரீரல்லவோ? (ஆதலினுல்,) |
| எல்லாம் அற | புறப்பற்றுக்கள் யாவும் அற்றுபோகவும் |
| என்னே இழந்த நலம் | யான் என்ற அகப்பற்று அற்றுப்போகவும் அதனுல் எய்தும் பேரின்பநலத்தை, |
| சொல்லாய் | அடியேனுக்கு உபதேசித்தருளுவீர், |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண்ட விடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வானோ புனல் பார் கனல் மாருதமோ
ஞான உதயமோ நவில் நான் மறையோ
யானோ மனமோ எனை ஆண்ட இடம்
தானோ பொருள் ஆவது சண்முகனே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| சண்முகனே | ஆறுமுகக் கடவுளே! |
| பொருள் ஆவது | உண்மைப்பொருள் (நித்தியப்பொருள்) என்பது, |
| வானோ | ஆகாயமோ? |
| புனலோ | தண்ணீரோ? |
| பாரோ | நிலனோ? |
| கனலோ | நெருப்போ? |
| மாருதமோ | காற்றோ? |
| ஞான உதயமோ | அறிவு தோன்றும் நிலைதானோ? |
| நவில் நான் மறையோ | ஓதப்படுகின்ற நான்கு வேதங்களோ? |
| யானோ | யான் என்கின்ற புருட தத்துவமோ? |
| மனமோ | மனமோ? |
| எனை ஆண்ட இடம்தானோ | அடியேனை ஆட்கொண்ட இடமோ? (அறியுமாறு அருள் செய்வீராக) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

வளைபட்ட கை மாதொடு மக்கள் எனும்
தளை பட்டு அழியத் தகுமோ தகுமோ
கிளை பட்டு எழு சூர் உரமும் கிரியும்
தொளை பட்டு உருவத் தொடு வேலவனே

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ கிளைபட்டு எழு | சுற்றத்தினர் சூழப்போருக்கு எழுந்த, |
| சூர் உரமும் | சூரபன்மனுடைய மார்பையும், |
| கிரியும் | கிரவுஞ்ச (அவுணனுகிய) மலையையும், |
| தொளைபட்டு உருவ | தொளைத்து ஊடுருவிச்செல்லும்படி |
| தொடு வேலவனே | தொடுத்த வேலாயுதத்தையுடைய வரே |
| வளைபட்ட கை | வளையலை அணிந்த கைகளையுடைய, |
| மாதொடு | மனைவியுடன், |
| மக்கள் எனும் | மக்களும் (பிறசெல்வம், உறவினர்) என்று கூறப்படுகின்ற, |
| தளைபட்டு அழிய | கட்டுப்பாட்டில் அடியேன் கட்டுண்டு அழிந்துபோதல், |
| தகுமோ? தகுமோ? ★ | தக்கது ஆகுமோ? தக்கது ஆகுமோ! (தகாது என்றபடி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
யகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே 5

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகம் ஆடை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| மகமாயை | வலிமை மிக்க பெரிய மாயைகளை (உலக வாழ்வெனும் மயக்கங்களை) எல்லாம் |
| களைந்திடவல்ல | நீக்க வல்லவராகிய, |
| பிரான் | உயிர்களை விட்டுப் பிரியாதவராகிய முருகப் பெருமானுடைய, |
| முகம் ஆறும் | ஆறு திருமுகங்களையும், |
| மொழிந்தும் | அடியேனுடையநாவானது 'ஆறுமுகம்' 'ஆறுமுகம்' என்று பன்முறை கூறியும், |
| அகம் | வீடு, |
| மாடு | செல்வம், |
| மடந்தையர் என்று | மாதர் என்று இவைகளை சதா நினைத்து |
| அயரும் | சோர்வு அடையச் செய்கின்ற, |
| சகமாயை உள் நின்று | உலகமாயையுள் கிடந்து |
| தயங்குவது ஒழிந்திலனே | கலங்குவதை அடியேன் விட்டு விலகப் பெற்றேனில்லையே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணியா னமநோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே. 6

திணியான மனோசிலை மீது உனதாள்
அணி ஆர் அரவிந்தம் அரும்பும் அதோ
பணி, யா? என வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயாபரனே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| பணி, யா? என | எனக்கு நீ இடும் கட்டளைகள் எவையோ?, என்று வினவி, |
| வள்ளி பதம் பணியும் | வள்ளியம்மையின் பாதத்தை வணங்குகின்ற, |
| தணியா | குறைவு இல்லாத, |
| அதிமோக | மிகுந்த காதல் கொண்டுள்ள, |
| தயாபரனே | மிகுந்த கருணைக் கடவுளே! |
| திணிஆன மனோசிலைமீது | மிகவும் கடினமான மனமாகிய கல்லின் மீது, |
| உனதாள் | உமது திருவடியாகிய, |
| அணிஆர் அர-விந்தம் அது அரும்புமதோ | அழகு நிறைந்த தாமரை மலருமோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவாய் மனனே! கதிகேள், கரவா
திடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

கெடுவாய் மனனே! கதிகேள் கரவாது
இடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| மனனே | ஏ மனமே! |
| கெடுவாய் | வீணே கெட்டொழிகின்றாய்; |
| கதிகேள் | நீ உய்யும் வழியைக் கூறுகின்றேன்; கேட்பாயாக, |
| கரவாது இடுவாய் | இரப்பவர்க்கு ஒளியாமல் இயன்றதைத் தருவாயாக, |
| வடிவேல் இறைதாள் நினைவாய் | கூரிய வேலாயுதத்தையுடைய முருகப் பெருமானுடைய திருவடியை மறவாமல் தியானிப்பாயாக. |
| நெடுவேதனை | (இவ்வாறு முருகவேளை நினைத்து வந்தால்) நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பத்தை, |
| தூள்படவே சுடுவாய் | பொடிப் பொடியாகப் போகுமாறு ஞானக்கினியால் சுட்டு எரிப்பாயாக; |
| வினை யாவையும் விடுவாய் விடுவாய் | வினைகள் அனைத்தையும் விட்டு விடுவாயாக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா!
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. 8

அமரும் பதி கேள் அகமாம் எனும் இப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா!
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொருதானவ நாசகனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| குமரன் | குமரக் கடவுள் |
| கிரிராசகுமாரி மகன் | மலையரசனது மகளாகிய பார்வதி புதல்வர், |
| சமரம்பொரு தானவ நாசகனே | போர் புரிந்த அசுரர்களை அழித்தவரே! |
| அமரும் பதி | யான் விரும்புகின்ற ஊர், |
| கேள் | உறவினர்கள் |
| அகம்ஆம் | நான் என்று கூறப்படுகின்ற, |
| இ பிமரம்கெட | இந்த மயக்க அறிவு கெட்டொழியுமாறு, |
| மெய்பொருள் பேசியவா | மெய்ப்பொருள் இன்னதென்று உபதேசித்தருளியவரே, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் படரென் றொழிவேன்,
தட்டூ டறவேல் சையிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே. 9

மட்டு ஊர் குழல்மங்கையர் மையல் வலை
பட்டு ஊசல் படும்படர் என்று ஒழிவேன்
தட்டு ஊடு அற வேல்சைலத்து எறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| சையிலத்து | கிரவுஞ்ச மலையின் மீது |
| தட்டு ஊடு அற | தடைகள் இன்றி அதன் நடுவிடம் ஊடுருவிச் செல்லும்படி |
| வேல் எறியும் | வேலாயுதத்தை விடுத்த, |
| நிட்டூர | கடுமை வாய்ந்தவரே! |
| நிராகுல நிர்ப்பயனே | கலக்கம் இல்லாதவரே! பயம் இல்லாதவரே! |
| மட்டு ஊர் குழல் | தேன் துளிக்கின்ற மலர் சூடிய கூந்தலையுடைய, |
| மங்கையர் | பெண்களது, |
| மையல் வலை பட்டு | மோக வலையில் அகப்பட்டு, |
| ஊசல் படும் படர் | ஊஞ்சல் ஆடுவதுபோல், உள்ளம் தடுமாறுகின்ற தன்மையை |
| என்று ஒழிவேன் | எக்காலத்தில் அடியேன் நீங்குவேன்? (விரைவில் விலக்கி அருள்புரிவீராக) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்;
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கார்மாமிசை காலன்வரின் கலபத்
தோர்மாமிசை வத்து எதிரப் படுவாய்
தார்மார்ப! வலாரி தலாரி! எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| தார் மார்ப | மலர்மாலையணிந்த திருமார்பினரே! |
| வலாரி தலாரி எனும் | வலன் என்னும் அசுரனையழிந்த இந்திரனுடைய நகரமாகிய பொன்னுலகை அழித்த |
| சூர் மா மடிய தொடு | சூரனாகிய மாமரம் அழிவுபடும்படி செலுத்திய, |
| வேலவனே | வேற்படையை உடையவரே! |
| கார் மா மிசை | கரிய எருமையின் மீது, |
| காலன் வரில் | காலன் வருகின்றபோது, |
| கலபத்து ஏர்மா மிசை வந்து | தோகையுடைய அழகிய மயில் வாகனத்தில் எழுந்தருளி வந்து, |
| எதிர்படுவாய் | அடியேன் எதிரே தரிசனம் தந்தருள்வீராக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா!
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே. 11

'கூகா என என் கிளைகூடி அழப்
போகா வகைமெய்ப் பொருள் பேசியவா
நாகாசல! வேலவ! நாலுகவி
த்யாகா! சுரலோக சிகாமணியே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| நாக அசல | நாககிரியாகிய திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியுள்ளவரே! |
| வேலவ | வேலாயுதக் கடவுளே! |
| நாலு கவி த்யாகா | ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நாற்கவிகளைப் பாடுந் திறத்தைத் தந்தருள்பவரே! |
| சுரலோக சிகாமணியே | தேவலோகத்துக்கு முதன்மையானவரே! |
| என் கிளை கூடி | எனது சுற்றத்தார் ஒன்றுகூடி. |
| கூகா என அழ | கூகா என்று ஓலமிட்டு அழும்படி, |
| போகா வகை | இறந்து போகாத வண்ணம், |
| மெய் பொருள் பேசியவா | உண்மை ஞானப் பொருளை அடியேனுக்கு உபதேசித்தருளியவரே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. 12

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மாஇரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ | |
| செம் மான் மகளை | செவ்விய மானின் புதல்வியாகிய வள்ளியம்மையாரை, |
| திருடும் திருடன் | (வேடரிடமிருந்து) களவில் கவர்ந்து போன கள்வரும், |
| பெம்மான் | பெருமையுடையவரும், |
| முருகன் பிறவான் இறவான் | பிறப்பு இறப்பு இல்லாத முழு முதற் கடவுளுமாகிய முருகப் பெருமான், |
| சொல் அற சும்மா இரு | சொல்லொழிந்து மௌன நிலையில் இருப்பாய், |
| என்றலுமே | என்று உபதேசித்தவுடனே, |
| பொருள் ஒன்றும் அறிந்திலனே | உலகப் பொருள் ஒன்றையும் அறியாது நின்றேன், |
| அம்மா ★ | இது என்ன அதிசயம்! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் றனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ!
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

முருகன் தனிவேல் முனி நம் குரு என்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ
உரு அன்று அரு அன்று உளது அன்று இலது அன்று
இருள் அன்று ஒளி அன்று என நின்ற அதுவே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ உரு அன்று | உருவப் பொருளும் அன்று, |
| அரு அன்று | அருவப் பொருளும் அன்று, |
| உளது அன்று | உள்ள பொருளும் அன்று, |
| இலது அன்று | இல்லாத பொருளும் அன்று, |
| இருள் அன்று | இருளும் அன்று, |
| ஒளி அன்று | ஒளியாகிய பொருளும் அன்று, |
| என நின்ற அதுவே | என்று சொல்லுந் தன்மையில் நின்ற அப் பரம் பொருளே, |
| முருகன் | முருகப் பெருமான் என்றும், |
| தனி வேல் முனி | ஒப்பற்ற வேலை ஏந்திய முனிவன் என்றும், |
| நம் குருஎன்று | நமது பரமகுரு என்றும், |
| அருள் கொண்டு அறியார் | அப்பரமனது திருவருளைக் கொண்டு அறியமாட்டாதவர்கள், |
| அறியும் தரமோ ★ | அறியவல்லவர் ஆவரோ? (ஆகார் என்றபடி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே! ஒழிவா யொழிவாய்;
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே. 14

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்(று)
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| மனனே | ஏ மனமே! |
| மெய் | உடம்பு, |
| வாய் | வாய், |
| விழி | கண், |
| நாசி | மூக்கு, |
| செவியாம் | காது ஆகிய |
| ஐவாய் வழிசெல்லும் அவாவினையே | ஐம்பொறிகளின் வழியே செல்லும் ஆசைகளை |
| ஒழிவாய் ஒழிவாய் | முற்றிலும் விடுவாய் விடுவாய் (அதனால்) |
| கைவாய் கதிர்வேல் | திருக்கரத்தில் ஒளிபெற்ற வேலாயுதத்தையுடைய |
| முருகன் கழல்பெற்று | முருகப்பெருமானுடைய திருவடியைப் பெற்று |
| உய்வாய் | உய்தி பெறுவாயாக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. 15

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| பொரு புங்கவரும் | அன்பு பொருந்தியுள்ள தேவர்களும், |
| புவியும் | மண்ணுலகத்தோரும், |
| பரவும் | புகழ்ந்து துதிக்கின்ற, |
| குரு புங்கவ | சிறந்த குருமூர்த்தியே, |
| எண்குண பஞ்சரனே | அருட்குணங்கள் எட்டுக்கும் உறைவிடமானவரே, |
| முருகன் குமரன் குகன் என்று மொழிந்து | முருகன், குமரன் குகன் என்று திருநாமங்களை மெய்யன்புடன் கூறி, |
| உருகும் செயல் தந்து | உள்ளம் உருகும் தன்மையைத் தந்து, |
| உணர்வு என்று அருள்வாய் | மெய்யுணர்வை எப்போது அடியேனுக்கு அருள்புரிவீர்? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ?
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா! சுரலோ கதுரந் தரனே. 16

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர் படவேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| வீரா | வீரமூர்த்தியே! |
| முதுசூர்பட | பழமையான சூரபன்மனுடைய உருவம் மாறி நிலை அழியும்படி |
| வேல் எறியும் | வேலாயுதத்தைச் செலுத்திய, |
| சூரா | சூரமணியே! |
| சுரலோக துரந்தரனே | தேவவுலகத்தைக் காத்தருளியவரே. |
| ஓரா வினையேன் | ஆராய்கின்ற நல்லறிவு இல்லாத தீவினையுடைய அடியேன், |
| பெரு ஆசை எனும் | பெரிய ஆசையாகிய, |
| பிணியில் பிணிபட்டு | தளையில் கட்டுண்டு, |
| உழலதகுமோ | உழலுதல் தகுதியோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமோ தியகல் வியுமெய் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே. 17

யாமோதிய கல்வியும் மெய்யறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போய் அறம் மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| யாம் ஓதிய | நாம் நல்லாசிரியர்பால் ஓதியுணர்ந்த. |
| கல்வியும் | கல்வியறிவையும், |
| எம் அறிவும் | நமது இயற்கை யறிவையும், |
| பெற | நாம் பெற்றுக்கொள்ளும்படி, |
| வேலவர் தாமே தந்த தனால் | மெய்ஞ்ஞான வேலை ஏந்திய முருகவேள் அவராகவே நமக்கு வழங்கிய காரணத்தால், |
| பூமேல் | பூமியில் உள்ளவரை, |
| மயல்போய் | நீங்கள் மயக்கங்களை நீக்கி, |
| அற மெய் புணர்வீர் | அறத்தொடும் உண்மையொடும் சேருங்கள், |
| இனி நாமேல் நடவீர் நடவீர் | இனிமேல் நாவில் நடவுங்கள், நடவுங்கள் அப் பெருமானைப் பாடுங்கள், பாடுங்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா!
அதிகா! வனகா! வபயா! வமரா
பதிகா வல!சூ ரபயங் கரனே. 18

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே.

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| உதியா | பிறவாமலும், |
| மரியா | இறவாமலும், |
| உணரா | நினையாமலும், |
| மறவா | மறவாமலும், |
| விதி மால் அறியா | நான்முகனும் நாரணனும் தேடிக் காணாதவனுமாய் விளங்கும், |
| விமலன் புதல்வா | மலமில்லாத சிவபெருமானுடைய திருக்குமாரரே! |
| அதிகா | எல்லார்க்கும் மேலானவரே! |
| அநகா | பாவம் இல்லாதவரே! |
| அபயா | பயம் இல்லாதவரே! |
| அமராவதி காவல | அமராவதியைக் காப்பாற்றியவரே! |
| சூர பயங்கரனே | சூரபன்மனுக்கு அச்சத்தைத் தந்தவரே! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா;
அடியந் தமிலா அயில்வே லரசே!
மிடியென் றொருபா விவெளிப் படினே. 19

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்று ஒரு பாவி வெளிப்படினே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| அடி அந்தம் இலா | முதலும் முடிவும் இல்லாத, |
| அயில்வேல் அரசே | கூரிய வேற்படையை ஏந்திய அரசே! |
| மிடி என்ற ஒரு பாவி | வறுமையென்ற ஒரு பாவி, |
| வெளிப் படினே | தோன்றினால், |
| வடிவும் | உடலழகும், |
| தனமும் | செல்வமும், |
| மனமும் | நல்ல மனமும், |
| குணமும் | நற்குணமும், |
| குடியும் | பிறந்த குடியின் பெருமையும், |
| குலமும் | பிறந்த குலத்தின் பெருமையும், |
| குடிபோகியவா | விட்டுவிட்டு வேறு இடத்திற்குக் குடி போய்விட்டன. (ஆ,-வியப்புக் குறிப்பு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரம! வே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. 20

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதாஉப தேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேள் இமையோர்
புரிதாரக நாக புரந்தரனே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| விரி தாரண | விரிந்து பரந்த உறுதியுள்ளவரே! |
| விக்கிரம | மிகுந்த வலிமையுடையவரே! |
| வேள் | எல்லோராலும் விரும்பப்படுகின்றவரே |
| இமையோர் புரிதாரக | தேவர்கள் விரும்பும் பிரணவப் பொருளே! |
| நாக புரந்தரனே | தேவர் உலகத்தைத் தாங்குபவரே! |
| அரிது ஆகிய | அடைதற்கு அரிது ஆகிய, |
| மெய்ப் பொருளுக்கு | உண்மைப் பொருளைப் பெறுவதற்கு, |
| அடியேன் உரிதா | அடியேனாகிய நான் தகுதியுடையவனாகும்படி. |
| உபதேசம் உணர்த்தியவா | உபதேசத்தினால் உணர்த்தியருளிய அருள்திறம் ஆச்சரியமானது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதா மறவா நெறிகா ணவெனக்
இருதாள் வனசந் தரவென் றிசைவாய்;
வரதா! முருகா! மயில்வா கனனே!
விரதா சுர! சூ ரவிபா டணனே. 21

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந்தரஎன்று இசைவாய்
வரதா முருகாமயில்வா கனனே
விரதா சுரசூர விபாடணனே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| வரதா | கேட்ட வரங்களை வழங்குபவரே! |
| முருகா | முருகக் கடவுளே! |
| மயில் வாகனனே | மயிலை வாகனமாகக் கொண்டவரே! |
| விதர அசுர சூர | அருவருப்புடைய அசுரனாகிய சூரபன்மனை, |
| விபாடணனே | வேலால் பிளந்தவரே! |
| கருதா மறவா நெறிகாண | நினைப்பு மறப்பு அற்ற வழியைக் கண்டுகொள்ள, |
| எனக்கு | அடியேனுக்கு, |
| இரு தாள் வனசம் த்ர | இரு பாதங்களாகிய தாமரைகளைத் தருவதற்கு, |
| என்று இசைவாய் | எப்பொழுது திருவுள்ளம் இசைந் தருளுவீர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா!
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. 22

காளைக் கும ரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா!
பாளைக்குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூ பதி மேருவையே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ பாளை குழல் | கமுகின்பாளைபோன்ற நீண்ட கூந்தலையுடைய, |
| வள்ளி பதம் பணியும் | வள்ளிபிராட்டியின் பாதங்களைத் தொழுகின்ற, |
| வேளை | செவ்வேளாகிய முருகப்பெருமானை, |
| சுரபூபதி | தேவர்களுக்குத் தலைவராய, |
| மேருவை | மேருமலைபோன்ற பெருமையுடையவரை, |
| காளை குமர ஈசன் என கருதி | காளைப்பருவம் உள்ள குமார மூர்த்தியென்று தியானித்து, |
| தாளை பணிய | அவருடைய திருவடியை வணங்கும்படி. |
| தவம் எய்தியவா ★ | தவத்தினை அடியேன் பெற்றபேறு ஆச்சரியமானது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியைக் குறியா தறியா மையினுன்
முடியக் கெடுவோ? முறையோ முறையோ?
வடிவிக் ரமவேல் மகிபா! குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

அடியைக் குறியாது அறியாமையினுல்
முடியக் கெடவோ! முறையோ! முறையோ!
வடிவிக்கிரம வேல் மகிபா! குறமின்
கொடியைப் புணருங் குணபூதரனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| ★ வடி விக்ரம வேல் மகிபா | கூர்மையும் வலிமையும் உடைய வேலாயுதத்தையேந்திய தலைவரே! |
| குறமின் கொடியை புணரும் | குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடிபோன்ற வள்ளிநாயகியைத் தழுவுகின்ற |
| குணபூதரனே | குணக் குன்றமே! |
| அடியை குறியாது | உமது திருவடியைத் தியானிக்காமல் |
| அறியாமையினுல் | அறிவின்மையினுல், |
| முடிய கெடவோ | அடியோடு அடியேன் அழிந்து படலாமோ? |
| முறையோ முறையோ ★ | இது நீதியோ? நீதியோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்வேல் விழிமங் கையர் கொங்கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ?
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே ல!புரந் தரபூ பதியே. 24

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ!
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல! புரந்தர பூபதியே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| சூர் வேரொடு ★ | சூரபன்மன் குலம் முழுவதையும், |
| குன்று தொளைத்த | அவனுக்கு அரண்புரிந்த எழு கிரிகளையும் தொளைத்த, |
| நெடும் போர் வேல | நெடிய போர் செய்யவல்ல வேலாயுதத்தை ஏந்தியவரே! |
| புரந்தர பூபதியே | இந்திரனுடைய நகரத்துக்குத் தலைவரே! |
| கூர் வேல் விழி | கூரிய வேல் போன்ற கண்களையுடைய, |
| மங்கையர் கொங்கையிலே | மாதர்களுடைய தனங்களை, |
| சேர்வேன் | சேர விரும்புகின்றவனாகிய சிறியேன், |
| அருள் சேரவும் எண்ணுமதோ ★ | திருவருட்பெற்றியை கூடுமாறு எண்ணும் பேறு பெறுமோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யே யென வெவ்வினை வாழ் வையுகந்
தையோ! அடியேனலையத் தகுமோ?
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய்! மயிலேறிய சேவகனே! 25

மெய்யே என வெவ் வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ!
கையோ! அயிலோ! கழலோ! முழுதும்
செய்யோய் மயில் ஏறிய சேவகனே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| கையோ | திருக்கரங்கள் மட்டுமோ? |
| அயிலோ! | கையில்ஏந்தும் வேலாயுதம் மட்டுமோ! |
| கழலோ | திருவடிகள் மட்டுமோ? |
| முழுதும் செய்யோய் | திருமேனி முழுதும் செம்மைநிறம் அமைந்தவரே! |
| மயில் ஏறிய சேவகனே | மயிலின்மீது ஏறிய வீரமூர்த்தியே! |
| வெவ் வினை வாழ்வை | கொடிய தீவினையால் வந்த வாழ்க்கையை, |
| மெய்யே என உகந்து | என்றும் நிலைத்ததாகக் கருதி மகிழ்ந்து, |
| ஐயோ | அந்தோ! |
| அடியேன் அலையதகுமோ | அடியேன் உழலுவது நீதியோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமிலே னருளைப் பெறவே
நீதா ளெருசற் றுநினைந் திலையே;
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா! சுரலோ கசிகா மணியே. 26

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற்றும் நினைத்தி லையே!
வேத ஆகம ஞான விநோத! மனோ
தீதா சுரலோக சிகாமணியே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| வேத ஆகம ஞான விநோத | வேதங்களினலும் ஆகமங்களினலும் விளைகின்ற ஞானத்துடன் பொழுது போக்குபவரே! |
| மன அதீதா | மனத்திற்கு எட்டாதவரே! |
| சுரலோக சிகாமணியே | தேவலோகத்தின் முடிமணியாக விளங்குபவரே! |
| ஆதாரம் இலேன் | உமது திருவடியையன்றி வேறு எவ்விதப் பற்றுக்கோடும் இல்லாதவனாகிய அடியேன், |
| அருளை பெறவே | திருவருளைப்பெற்று உய்யுமாறு, |
| நீதான் ஒரு சற்றும் நினைத்திலையே | தேவரீர் ஒரு சிறிதளவேனும் நினைக்கவில்லையே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ!
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே மயிலே றியவா னவனே. 27

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ!
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயில் ஏறிய வானவனே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
|---|---|
| பொன்னே | பொன்போல அருமை வாய்ந்தவரே! |
| மணியே | மணிபோல ஒளி வீசுபவரே! |
| பொருளே | பேரின்பப் பொருளே! |
| அருளே | பேரருளுடையவரே! |
| மன்னே | நிலைபெற்ற தலைவரே! |
| மயில் ஏறிய வானவனே | மயிலை வாகனமாகக் கொண்ட மேலானவரே! |
| மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான் | மின்னலைப்போல் தோன்றி உடனே மறையும் நிலையில்லாத உலக வாழ்வை நிலைத்ததென எண்ணி விரும்பியுள்ள அடியேன் |
| என்னே | என்ன என்று சொல்வேன் |
| இங்கு | இந்தவுலகில் |
| விதியின்பயன் இதுவோ | என் தலைவிதியின் பயன் இதுதானோ! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு வமுதே! அயில்வே லரசே!
ஞான கரனே! நவிலத் தகுமே!
யாறு இயவென் னைவிழுங் கிவெறுந்
தாறுய் நிலைநின் றதுதற் பரமே. 28

ஆறுஅமுதே! அயில்வேல் அரசே!
ஞான கரனே! நவிலத் தகுமோ!
யாறுகிய என்னை விழுங்கி வெறுந்
தாறுய் நின்றது தற் பரமே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ஆறு அமுதே | கெடுதல் இல்லாத அமுதம் போன்ற இனியவரே |
| அயில் வேல் அரசே | கூரிய வேலாயுதத்தை உடைய அரசே |
| ஞான ஆகரனே | ஞானத்துக்கு இருப்பிடமானவரே |
| யான் ஆகிய என்னை விழுங்கி | யான் என்னும் ஆணவமுனைப்பில் அழுந்தியிருக்கும் உயிராகிய என்னை எனது சீவபோதத்தைப் போக்கி, சிவபோதத்துள் அடக்கிக் கொண்டு, |
| வெறும் தாறுய் | வேறு ஒன்றும் இல்லாது எல்லாம் தானேயாய் |
| நிலை நின்றது | நிலைப்பெற்று நிற்கின்ற |
| தற்பரமே | மேலான நிலையை |
| நவிலத் தகுமோ | (உணர்வதல்லால், பிறருக்கு) சொல்ல இயலுமே? (சொல்ல இயலாது என்றபடி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லே யெனுமாயையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 29

இல்லே எனும் மாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர்வே லவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| மல்லே புரி | மற்போர் புரிவதற்கு ஏற்றதான |
| பன் இரு வாகு வில் | பன்னிரண்டு திருத்தோள்களிலும் |
| என் சொல்லே புனையும் | அடியேனுடைய பாமாலைகளையே தரித்துக் கொள்ளும் |
| சுடர் வேலவனே | ஒளி வீசும் வேலாயுதக் கடவுளே |
| இல்லே எனும் மாயையில் | இல் வாழ்க்கை யென்னும் மாய வாழ்வில் |
| நீ இட்டனை | அடியேனை அகப்படச் செய்து விட்டீர் |
| பொல்லேன் | தீயேனாகிய என்னுடைய |
| அறியாமை பொறுத் திலையே | அறிவீனத்தால் செய்த பிழைகளைப் பொறுத்திரில்லையே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித்தது தான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது வே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| செவ்வான் உருவில்திகழ் | செம்மையான வானவுருவத்துடன் விளங்கும் |
| வேலவன் | வேற்பெருமான் |
| அன்று | அந்நாளில் |
| ஒவ்வாதது என | இந்த உபதேசத்துக்கு நிகரானது வேறொன்றுமில்லை என்று சொல்லும் படி |
| உணர்வித்தது தான் | உபதேசத்தால் உணர்த்திய சுவாநுபூதியை |
| அவ்வாறு | அறிவார் அறிகின்றது |
| அலால் | அங்ஙனம் உபதேசமுறையில் தமக்குள் உள்ளுணர்வால் உணர்வதல்லாமல் |
| ஒருவர்க்குஎவ் வாறு இசை விப்பது | அதனை மற்றொருவருக்கு வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும்? (முடியாது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே;
தாழ்வா னவைசெய் தனதா முளவோ?
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

பாழ் வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் எனஎன்னை விதித் தனையே!
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனிநீ மயில் வாகனனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| மயில் வாகனனே | மயிலை வாகனமாகக் கொண்ட முருகப் பெருமானே |
| பாழ் வாழ்வு எனும் | நிலையில்லாத (அழியும்) உலகவாழ்வு என்கின்ற |
| இ படு மாயையிலே | இந்தப் பெரிய மாயையாகிய படு குழியிலே, |
| வீழ்வாய் என | நீ விழுவாயாக என்று, |
| என்னை விதித்தனையே | அடியேன் தலையில் எழுதிவிட்டீரே, |
| தாழ்வு ஆனவை | (இதற்குக் காரணமான) இழிவான செய்கைகள், |
| செய்தன உளவோ | அடியேன் முன் செய்தவைகள் இருக்கின்றனவோ? |
| இனி நீ வாழ்வாய் | இன்னும் நீர் (உலகில் உயிர்களை பிறக்கச் செய்து உமது திருவடி அனுபூதியை அளித்தற்கு) என்றும் வாழ்வீராக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ?
கொலையே புரிவேடர் குலப் பிடிதோய்
மலையே! மலைகூ றிடுவா கையனே. 32

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு அதுவாய் விடவோ!
கொலையே புரிவேடர் குலப்பிடி தோய்
மலையே! மலைகூறிடு வாகைய னே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| கொலையேபுரி | கொலைத் தொழிலையே செய்கின்ற |
| வேடர்குல பிடிதோய் | வேடர் குலத்தில் வளர்ந்த பெண் யானைபோன்ற வள்ளிநாயகியார் தழுவி மகிழ்கின்ற |
| மலையே | மலை போன்றவரே |
| மலைகூறு இடு வாகையனே | கிரவுஞ்ச மலையைப் பிளந்து வெற்றி பெற்றவரே |
| தலை ஊடலையே படும் ஆறு | முதன்மையாக சமயவாதிகளுடன் வாதஞ் செய்து பிணங்குதலையே பொருந்து முறையில் |
| கலையே பதறி கதறி | சாத்திர நூல்களை மனங்கலங்கிச் சத்தம் போட்டுப்பேசி |
| அதுவாய் விடவோ | அந்த வாதமயமாகவே அடியேன் ஆகிவிடலாமோ (ஆகாது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே!
கந்தா! முருகா! கருணா கரனே! 33

சிந்தா குல இல்லொடு செல்வம் எனும்
விந்தா டவிஎன்று விடப் பெறுவேன்!
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ மந்தா கினி தந்த | கங்கா நதி தாங்கிக் கொடுத்த |
| வர உதயனே | தேவர்கள் கேட்ட வரத்தின்படி சிவ மூர்த்தியிடத்தில் உதித்தவரே! |
| கந்தா | கந்தக் கடவுளே! |
| முருகா | முருகப் பெருமானே! |
| கருணாகரனே | கருணைக்கு உறைவிடமானவரே |
| சிந்தை ஆகுலம் | மனதில் துன்பத்தைத் தருவதற்கு ஏதுக்களாயுள்ள |
| இல்லொடு செல்வம் எனும் | மனைவி மக்கள் செல்வம் என்கின்ற, |
| விந்த அடவி | விந்தமலைக் காடுபோன்ற இத்துயரத்தை, |
| என்று விட பெறுவேன் ★ | அடியேன் என்று நீங்கப்பெறுவேன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்காம லெனக்கு வரந்தருவாய்
சங்க்ரா மசிகா வல!சண் முகனே
கங்கா நதிபால க்ருபா கரனே. 34

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரந்தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே!
கங்காநதி பாலகிருபா கரனே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| சங்க்ராம சிகாவல | போரில் வல்ல மயிலை உடையவரே, |
| சண்முகனே | ஆறுமுகக் கடவுளே, |
| கங்கா நதி பால | கங்கா நதியின் புதல்வரே, |
| க்ருபாகரனே | கருணைக்கு இருப்பிடமானவரே, |
| சிங்கார மடந்தையர் | அலங்காரம் புரிந்து கொள்ளுகின்ற பொது மாதர்களின் |
| தீ நெறி போய் | தீயவழியிலே சென்று |
| மங்காமல் | கெட்டுப்போகாமல் |
| எனக்கு வரம் தருவாய் | அடியேனுக் வரம் தந்தருளுவீராக! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
றுதியா விரதா சுரபூ பதியே. 35

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்?
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா! சுர பூபதியே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| மதிவாள் நுதல் | பிறைச் சந்திரனை யொத்த ஒளி வீசுகின்ற நெற்றியையுடைய |
| வள்ளியை அல்லது | வள்ளியம்மையைத் தவிர |
| பின் துதியா | வேறு ஒருவரையும் புகழாத |
| விரதா | நோன்பு பூண்டவரே! |
| சுரபூபதியே | விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்குந் தலைவரே! |
| விதிகாணும் | பிரமதேவன் படைத்த, |
| உடம்பை விடா வினையேன் | உடம்மை விடாத வினைகளை யுடைய அடியேன் |
| கதிகாண | நல்ல கதியை அடையும் படி, |
| மலர்கழல் | தாமரை மலர்போன்ற உமது திருவடியை, |
| என்று அருள் வாய் | எப்போது என் தலைமீது சூட்டி அருள் புரிவீர்! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதா! குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருளே?
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

நாதா! குமரா! நம என்று அரனுர்
ஓதாய் எனஓதியது எப்பொருளோ?
வேதா முதல் விண் ணவர் சூடுமலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| வேதாமுதல் விண்ணவர் | பிரமதேவன் முதலிய தேவர்கள் |
| சூடும் மலர் பாதா | தங்கள் தலையில் சூடிக்கொள்ளுகின்ற தாமரையன்ன திருவடிகளை யுடைவரே! |
| குறமின் பத சேகரனே | மின்னல் கொடி போன்ற வள்ளியம்மையின் பாதத்தைச் சூடிக்கொண்டவரே! |
| அரனுர் | சிவபெருமான் |
| நாதா | தலைவனே |
| குமரா நம என | குமாரக் கடவுளே வணக்கம் என்று வணங்கி |
| ஓ தாய் என | எனக்கு உபதேசிப்பாய் என்று கேட்க |
| ஓதியது எப்பொருள் தான் | உபதேசித்தது எத்தகைய பொருள்? (அதை அடியேனுக்கும் உபதேசித் தருளுவீராக) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிவாய் விடுவிக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எமனும் பத மேவலேயே
புரிவாய் மனனே! பொறையா மறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே. 37

இரிவாய்விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலேயே!
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தை யையே

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| மனனே | ஏ மனமே! |
| இரிவாய் விடு | கிரவுஞ்ச மலையின்மீது அதுதொளைபடுமாறு விடுத்த |
| விக்ரமவேல் இறையோன் | மிக்க வலிமையுடைய வேற்படையை உடைய இறைவனுகிய முருகக் கடவுளை |
| பரிவாரம் எனும் | அடியார்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தாரே என்ற, |
| பதம் மேவலேயே புரிவாய் | பதவியை அடைவதையே நீ விரும்புவாயாக |
| அகந்தையை பொறையாம் அறிவால் | நான் என்னும் அகங்காரத்தின் கொடியை பொறுமையாகிய ஞான வாளால் |
| அடியோடு அரிவாய் | வேருடன் அரிந்து தள்ளுவாயாக |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ?
கூதா ளகிரா தகுலிக் கிறைவா!
வேதா ளகணம் புகழ்வே லவனே. 38

ஆதாளியை ஒன்றும் அறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ!
கூதாள! கிராத குலிக்கு இறைவா!
வேதாள கணம் புகழ் வேலவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| கூதாள | கூதாள மலரை அணிந்தவரே! |
| கிராத குலிக்கு இறைவா | வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளி நாயகிக்குத் தலைவரே! |
| வேதாள கணம் புகழ் | பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிக்கின்ற, |
| வேலவனே | வேற் படையையுடையவரே! |
| ஆதாளியை | வீண் பேச்சுக்களைப் பேசுபவனும், |
| ஒன்றும் அறியேனை | நன்மை ஒன்றும் அறியாதவனும், |
| அற தீதாளியை | மிகவும் தீக்குணம் உடையவனும் ஆகிய அடியேனை, |
| ஆண்டது செப்புமதோ | ஒரு பொருளாகக் கருதி நீர் ஆட்கொண்ட அருள் திறத்தைச் சொல்லுந்தரமோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ?
கோவே! குறமின் கொடிதோள் புணருந்
தேவே! சிவசங் கரதே சிகனே. 39

மாஏழ் சனனம் கெட மாயைவிடா
மூ ஏடணை என்று முடிந்திடுமோ?
கோவே! குறமின் கொடி தோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| கோவே | உலகங்கட் கெல்லாம் அரசே! |
| குறமின் கொடி தோள் புணரும் | குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி போன்ற வள்ளி நாயகியின் தோள்களைத் தழுவுகின்ற |
| தேவே | தெய்வமே! |
| சிவசங்கர தேசிகனே | மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்ப வருமான சிவமூர்த்தியின் குருநாதரே! |
| மா ஏழ் சனனம் கெட | பெரிய ஏழு வகையான பிறவிகளும் தொலையுமாறு |
| மாயை விடா | மாயையினின்றும் நீங்காத |
| மூ ஏடணை | மூன்று ஆசைகளும் |
| என்று முடிந் திடுமோ | எப்பொழுது தான் அடியேனைப் பற்றறுது அகலுமோ! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. 40

வினையோட விடுங்கதிர் வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ!
சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதணோடு திரிந்தவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| சுனையோடு | சுனையினிடத்தும் |
| அருவித் துறையோடு | மலையருவிகள் விழும் துறைகளிடத்தும் |
| பசும் தினையோடு | பசியதினைப் புனத்திடத்தும் |
| இதணோடு | பரணிடத்தும் |
| திரிந்தவனே | வள்ளி நாயகிக்கு அருள் செய்யும் பொருட்டுத் திரிந்த பெருமானே! |
| வினை ஓட விடும் | ஆன்மாக்களின் நல்வினை, தீவினை என்ற இருவினைகளும் ஓடும்படிச் செய்கின்ற |
| கதிர்வேல் மறவேன் | ஞான ஒளி வீசுகின்ற வேலாயுதத்தை ஒருபோதும் மறக்கமாட்டேன் |
| மனையோடு தியங்கி மயங்கிடவோ | மனைவியுடன் கூடி வாழும் இல்வாழ்வில் கலக்கங்கொண்டு மயக்கங் கொள்ளலாமோ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனுர் கலகஞ் செயுநாள்
வாகா முருகா! மயில்வா கனனே!
யோகா சிவஞா னுபதே சிகனே. 41

சாகாது எனையே சரணங் களிலே
காகா நமனுர் கலகஞ் செயும் நாள்
வாகா முருகா மயில்வா கனனே!
யோகா சிவ ஞானுப தேசிகனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| வாகா | அழகரே! |
| முருகா | முருகக் கடவுளே! |
| மயில் வாகனனே | மயில் மீது வரும்பெருமானே! |
| யோகா | சராசரங்களில் கலந்திருப்பவரே! |
| சிவஞான உப தேசிகனே | சிவஞானத்தைப் பக்குவ ஆன்மாக் களுக்கு உபதேசிக்கின்றவரே |
| நமனுர் கலகம் செய்யும் நாள் | இயமன்வந்து என்பரு உடம்பில் இருந்து உயிரைப் பிரிக்கும் பொருட்டு பாசக் கயிற்றை விசிக் கலகம் புரிகின்ற நாளிலே |
| சாகாது | அடியேன் இறவாதபடி |
| எனை சரணங்க ளில் காகா | அடியேனை உமது திருவடி நிழலில் தங்கு மாறு செய்து காத்தருள் வீராக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. 42

குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவு அற்று உலகோடு உரைசிந்தையும் அற்று
அறிவு அற்று அறியாமையும் அற்றதுவே

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| குறியை | தியானிக்கப்படுகின்ற பொருளை |
| குறியாது குறித்து | காலம் இடம் முதலியன இன்றி பிற வற்றை நினையாமல் அதனையே தியானித்து |
| அறியும் நெறியை | பசுஞான பாசஞானங்களாலன்றி பதி ஞானத்தால் அறியும் உண்மை வழியை |
| தனிவேல் ஐ நிகழ்த்திடலும் | ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய கடவுள் மௌன குருவாய் வந்து உள்நின்று உணர்த்தியவுடனே |
| உலகோடு செறிவு அற்று | உலகத்தாரோடு நெருங்கும் உறவு அற்று |
| உரை அற்று | வாக்கும் அற்று |
| சிந்தையும் அற்று | நினைவும் அற்று |
| அறிவற்று | சுட்டியறிகின்ற அறிவும் அற்று |
| அறியாமையும் அற்றதுவே | அறியாமையும் அடியுடன் நீங்கி விட்டன. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசாம் அணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந் ததுவே. 43

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா நினது அன்பு அருளால்
ஆசா! நிகளம் துகள் ஆனபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| ★ தூசு ஆம் மணியும் | தூய்மையான இரத்தின மணிகளும் |
| துகிலும் புனைவாள் | ஆடையும் அணிகின்ற வள்ளி பிராட்டியாரின் |
| நேசா | காதலரே |
| முருகா | முருகப்பெருமானே! |
| நினது அன்பு அருளால் | தேவரீருடைய அன்புடன் கூடிய அருளினால் |
| ஆசா நிகளம் | ஆசையாகிய விலங்கு |
| துகள் ஆயினபின் | தூள்தூளாக முற்றிலும் பொடியாயின பின்பு |
| பேசா அநுபூதி பிறந்ததுவே ★ | மௌனம் என்ற அநுபூதி நிலை அடியேனுக்குத் தோன்றியது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லு மதோ?
வீடுஞ்சுரர் மாமுடி வேதமும் வெம்
காடும் புனமும் கமழுங் கழலே. 44

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லுமதோ!
வீடும் சுரர் மாமுடி வேதமும்வெங்
காடும் புனமும் கமழும் கழலே!

| கொண்டு கூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| சாடும் | பகைவர்களையும், மலமாய கன்மங்களையும் அழிக்கின்ற |
| தனிவேல் முருகன் சரணம் | ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய முருகனுடைய திருவடிகள், |
| வீடும் | முத்தித் தலத்திலும், |
| சுரர் மாமுடி | தேவர்களுடைய சிறந்த தலைகளிலும், |
| வேதமும் | வேதங்களிலும் |
| வெம்காடும் புனமும் கமழும் | வள்ளியம்மை வாழ்ந்த வெப்பமான காட்டிலும் திணைப்புனத்திலும் மணக்கும் படி விளங்கும் |
| கழல் சூடும் படி தந்தது | அத்தகைய திருவடியை அடியேன் சென்னியின் மீது சூட்டிக் கொள்ளும் படி தத்தருளிய கருணையை |
| சொல்லு மதோ! | சொல்ல முடியுமோ? (முடியாது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவா இயகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ?
குரவா! குமரா! குலிசா யுத!குஞ்
சரவா! சிவயோ கதயா பரனே! 45

கரவு ஆகிய கல்வி யுளார் கடைசென்று
இரவா வகைமெய்ப்பொருள் ஈகுவையோ!
குரவா! குமரா! குலிசாயுத குஞ்
சரவா! சிவயோக தயாபரனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
| --- | --- |
| குரவா | சற்குருநாதரே! |
| குமரா | குமரக் கடவுளே! |
| குலிச ஆயுத | வச்சிரப் படையை யுடையவரே! |
| குஞ்சரவா | தெய்வயானைக்கு நாயகரே! |
| சிவயோக தயாபரனே | பக்குவப் பட்ட அடியார்கட்குச் சிவ யோக நிலையைப் பாலிக்கும் கருணை மூர்த்தியே! |
| கரவு ஆகிய கல்வி உளார் கடை சென்று | தாம்கற்ற கல்வியைப் பிறருக்குச் சொல்லாமல் ஒளித்து வைக்கின்ற புலவர்களிடம் போய் |
| இரவாவகை | அக்கல்வி ஞானத்தை அடியேன் யாசிக் காத வண்ணம் |
| மெய்பொருள் ஈகுவையோ | உண்மைப் பொருளை உபதேசித்து அருள் புரிவீரோ? (அருள் புரிவீராக) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தா யுமெனக் கருடந் தையுநீ;
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநா யகனே. 46

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும்நீ!
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| கந்தா | கந்தக் கடவுளே! |
| கதிர் வேலவனே | ஒளி நிறைந்த வேலாயுதரே! |
| உமையாள் மைந்தா | உமாதேவியின் திருக்குமாரரே |
| குமரா | குமார மூர்த்தியே |
| மறை நாயகனே | வேதங்களுக்குத் தலைவரே |
| எம்தாயும் | எங்களுக்கு அன்னையும் |
| எனக்குஅருள் தந்தையும் நீ | எனக்கு அருள் புரிகின்ற தந்தையும் நீர்தான் |
| சிந்தை ஆகு லம் ஆனவை | அடியேனுடைய மனக் கவலைகள் அனைத்தையும் |
| தீர்த்து எனை ஆள் | ஒழித்து ஆண்டருள்வீராக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்
பேறு வடியேன் பெறுமா றுளதோ?
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர்வித் தவனே. 47

ஆறுறையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறு அடியேன் பெறுமாறுளதோ!
சீறுவருசூர் சிதைவித் திமையோர்
கூறு உலகம் குளிர்வித் தவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| சீறு வரு | கோபித்து வந்த |
| சூர் சிதைவித்து | சூரபன்மனை அழித்து |
| கூறு இமையோர் உலகம் | துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்களின் உலகத்தை |
| குளிர்வித்தவனே | குளிருமாறு செய்தருளியவரே! |
| ஆறு ஆறையும் நீத்து | முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து |
| அதன் மேல் நிலையை | அவைகட்கு அப்பால் உள்ள அநுபூதியாகிய சாயுச்சிய நிலையை |
| அடியேன் பேறு | அடியென் பெறும் பேறுக |
| பெறும் ஆறு உளதோ | பெற்றுக் கொள்ளுகின்ற வழி எப்பொது உண்டாகுமோ! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலேயோ?
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. 48

அறிவு ஒன்று அறநின்று அறிவார் அறிவின்
பிறிவு ஒன்று அறநின்ற பிரான் அலேயோ
செறிவு ஒன்று அறவந்து இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| செறிவு ஒன்று அறவந்து | உலக பந்த பாசத்தில் நெருக்கமான உறவுகள் அற்றுப் போகும் நிலே வந்து, |
| இருளே சிதைய | அதனால் மல இருள் முற்றிலும் வலிகுன்றி ஒழியும்படி, |
| வெறி வென் றவரோடு | மயக்கத்தை வென்ற சிவ ஞானிகளுடன் |
| உறும் வேலவனே | பொருந்தியிருக்கும் வேலாயுதரே, |
| அறிவு ஒன்று அற | சிவபோதம் என்ற ஒன்று நீங்க, |
| நின்று அறிவார் அறிவில் | சிவபோத நிலேயில் அடங்கி அந்த அருட் காட்சியில் நின்று பதி ஞானத் தால் உணர்கின்ற சிவஞானிகளது உள்ளுணர்வில். |
| பிறிவு ஒன்று அற | பிரிதல் சிறிதும் இல்லாமல், |
| நின்ற பிரான் அலேயோ | கலந்து நின்ற பெருமான் நீரேயன்றோ? (ஞானவடிவாய் நின்ற நீர் அந்த ஞானத்தை அடியேனுக்கு அருளுவீராக,) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ?
மின்னுங் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

தன்னந் தனிநின்றது தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ!
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபைசூழ் சுடரே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| மின்னும் கதிர்வேல் | ஒளி வீசுகின்ற கதிர்வேலையேந்திய, |
| விகிர்தா | வேறு வேறு வடிவங்களையுடையவரே! |
| நினைவார் இன்னம் களையும் | தேவரீரைத் தியானிக்கும் அடியார்களின் துன்பத்தைப் போக்குகின்ற |
| கிருபை சூழ் சுடரே | கருணை சூழ்ந்த பேரொளியே! |
| தன்னந் தனி நின்றது தான் | கருவி கரணங்களிலிருந்து கழன்று தனிமையான இனிமையில் நிலை நின்ற பேரின்பத்தை, |
| அறிய | மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி, |
| இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ | இனிமற்றவர்க்கு விளக்கிச் சொல்ல இயலுமோ? (இயலாது என்றபடி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

மதிகெட்டு அற வாடி மயங்கி அறக்
கதிகெட்டு அவமே கெடவோ கடவேன்!
நதிபுத்திர ஞான சுகாதி பவத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே!

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| நதி புத்திர | கங்கா நதியின் திருக்குமாரரே! |
| ஞான சுக அதிப | மெய்யறிவுக்கும் அதனால் விளையும் பேரின்பத்துக்கும் தலைவரே! |
| அ திதி புத்திரர் | அந்தத் திதி புதல்வராகிய அசுரர்களின் |
| வீறு அடு சேவகனே | வலிமையை அழித்த வீரமூர்த்தியே! |
| மதி கெட்டு | அறிவு குலைந்து |
| அற வாடி | மிகவும் வாட்டமுற்று |
| மயங்கி | மயக்கமுற்று |
| அற கதி கெட்டு | அறநெறியால் வரும் உமது திருவடி அநுபூதியை யிழந்து |
| கெடவோ கடவேன் | வீணாகக் கெட்டொழிந்து விடவோ உரியவன். (அவ்வாறு கெடமாட்டேன் காத்தருள்வீராக) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவா யருவா யுளதாய் யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

| கொண்டுகூட்டு | பொழிப்புரை |
|---|---|
| உருவாய் ★ | உருவுள்ளவராயும் |
| உளது ஆய் | உள்ள பொருளாகவும் |
| இலது ஆய் | காண்பதற்கு இல்லாத பொருளாகவும் |
| மரு ஆய் | நறுமண மாகியும் |
| மலர் ஆய் | நறுமணமுடைய மலராகியும் |
| மணி ஆய் | இரத்தின மணியாகியும் |
| ஒளி ஆய் | அம்மணியில் உள்ள ஒளியாகியும் |
| கரு ஆய் | அகில உலகங் கட்கும் மூலப்பொருளாகியும் |
| உயிர் ஆய் | உயிர்க்கு உயிராகியும் |
| கதி ஆய் | ஆன்மாக்கள் முடிவில் அடையும் வீடுபேறுகியும் விளங்கும் |
| குகனே | குகமூர்த்தியே; |
| குருவாய் வருவாய் அருள்வாய் ★ | குருமூர்த்தியாக எழுந்தருளிவந்து அருள்புரிவீராக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org